**செய்தி வெளியீடு எண்: 437** **நாள் : 19.08.2014**

**செய்தி வெளியீடு**

**தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், அட்வான்ஸ் டிரெயினிங் இன்ஸ்டிடியூட் (ATI), கிண்டி, சென்னையுடன் இணைந்து வழங்கும்**

**இலவச திறன் எய்தும் பயிற்சித் திட்டம்**

இன்றைய தொழிற்வளர்ச்சியின் காரணமாக புதுயுக இயந்திரங்களை இயக்கும் திறன்பெற்றவர்களின் தேவைகளை கருத்தில் கொண்டு மத்திய அரசின் அட்வான்ஸ் டிரெயினிங் இன்ஸ்டிடியூட் (ATI), கிண்டி பயிற்சி நிலையத்துடன் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பின்வரும் குறுகியகால திறன் எய்தும் பயிற்சிகளை வழங்க திட்டமிட்டுள்ளது.

1. ஆட்டோமொபைல் வாகன பழுதுபார்த்தல்
2. சி.என்.சி மெஷின் புரோகிராம் மற்றும் இயக்குதல்.
3. பற்றவைப்பு (வெல்டிங்).
4. எலெக்ட்ரிகல் மெஷின் மற்றும் டிரான்ஸ்பார்மர் பராமரிப்பு
5. டர்னர், மில்லிங், கிரைண்டிங் இயந்திரங்களை இயக்குதல்.
6. தொழிற்சாலை கருவிகள் அளவெடுத்தல் மற்றும் கட்டுபாடு பற்றி அறிதல்.
7. வெப்ப சோதனை மற்றும் உலோகங்களை சோதித்தல்.

இத்திறன் எய்தும் பயிற்சி முழுக்க முழுக்க இலவசமாகும். **பயிற்சி நேரம் தினசரி காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை** அட்வான்ஸ் டிரெயினிங் இன்ஸ்டிடியூட் **(ATI) கிண்டி, சென்னையில் நடைபெறும்.** பயிற்சியின் முடிவில் திருப்திகரமாக பயிற்சியினை நிறைவு செய்யும் பயிற்சியாளர்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சிகளில் சேர **8ம் வகுப்பு** தேர்ச்சி, 10**ம் வகுப்பு** தேர்ச்சி, ஐ.டி.ஐ மற்றும் டிப்ளமோ ஆகிய கல்விதகுதிகளுக்கு ஏற்ப தொழிற்பிரிவுகள் ஒதுக்கீடு செய்யப்படும். இப்பயிற்சியில் சேர விருப்பமுள்ளவர்களின் **வயது வரம்பு 18 முதல் 45க்கு மிகாமல்**

**இருத்தல் வேண்டும்.அரசு விதிகளின் படி இனசுழற்சி பின்பற்றப்படும். தங்குமிட வசதி விருப்பத்தின் பேரில் கட்டண அடிப்படையில் ஏற்பாடு செய்து தரப்படும்.**

விண்ணப்பதாரர்கள் தங்களது **அசல் கல்விச் சான்று, சாதிச் சான்று, இருப்பிட முகவரிக்கான சான்று மற்றும் சமீபத்தில் எடுக்கப்பட்ட 2 புகைப்படங்கள் (passport size) கொண்டு வர வேண்டும். மேலும், இப்பயிற்சியில் சேர இச்சான்றுகளின் 2 நகல்களுடன், பயிற்சி நிலையத்தில் அளிக்கப்படும் விண்ணப்பத்தினையும் பூர்த்தி செய்து அளிக்க வேண்டும்.**

**இப்பயிற்சிக்கான விண்ணப்பங்கள் 20.08.2014 முதல் 22.08.2014 வரை அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்), கிண்டி, சென்னை - 32ல் வழங்கப்படும்.**

பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் (மகளிர்), கிண்டி, சென்னை அவர்களை மேற்கூறிய தினங்களில் **நேரில் அணுகுமாறு முனைவர், M. வீர சண்முக மணி, இ.ஆ.ப., இயக்குநர்(பொ), தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம், அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**